بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

# விதிமுறைகள்

1. வயது : ஆறு முதல் பத்துக்குள் இருக்க வேண்டும்.
2. வாரத்தில் சனி அல்லது ஞாயிறு அன்று ஏதாவது ஒரு நாளில், பத்து நிமிடம் மட்டுமே (வாய்ப்பிருந்தால்) தொலைபேசியில் பேச அனுமதிக்கப்படுவார்.
3. மாதம் ஒரு முறை ஞாயிற்றுக்கிழமைகளில் அதிகபட்சம் ஒரு மணி நேரம் வரை நேரடியாக சந்திக்கலாம்
4. மாணவரின் உணவு, உடை, தங்குமிடம், கல்வி உள்ளிட்ட அனைத்துச் செலவுகளையும் ஆதரவு இல்லமே பொறுப்பேற்கும். எனவே உணவு, உடை, பணம் போன்ற எந்தப் பொருட்களையும் மாணவரிடம் கொடுக்கக்கூடாது
5. செல்போன் போன்ற படிப்புக்கு இடையூறாக இருக்கும் எந்தப் பொருட்களையும் கொடுக்கக் கூடாது.
6. ஒவ்வொரு கல்வி ஆண்டின் இறுதியில் இல்லத்தின் நிர்வாகம் நிர்ணயிக்கும் விடுமுறைகளே கோடை கால விடுமுறையாகும். எனவே அந்த நாள்களை மட்டுமே கோடைகால விடுமுறையாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.
7. விடுதியில் தங்கி மருத்துவம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டால் வீட்டிற்கு அழைத்துச் சென்று மருத்துவம் செய்ய வேண்டும்.
8. மாணவர்களின் படிப்பு முறை மற்றும் கல்வி நிறுவனங்களை நிர்வாகம் மட்டுமே முடிவு செய்யும்
9. அடையாள அட்டை உள்ளவர்கள் மட்டுமே மாணவர்களிடம் பேசவும் பார்க்கவும் அனுமதிக்கப்படுவர்.
10. பள்ளிக்கூடம் செல்லும்போதோ அல்லது விடுதியில் தங்கியிருக்கும் நிலையிலோ மாணவர்கள் தொலைந்து விட்டால் நிர்வாகம் பொறுப்பேற்காது.
11. மனநிலை பாதிக்கப்பட்டவர்கள், படிக்க முடியாத நிலையில் உள்ளவர்கள், தன் வேலையை தானே செய்ய முடியாத நிலையில் உள்ளவர்கள் என இதுபோன்றவர்களை சேர்த்துக் கொள்ள இயலாது.
12. நிர்வாகம் தேவைக்கேற்ப புதிய விதிமுறைகளை அவ்வப்போது நடைமுறைப்படுத்தும். அந்த விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.
13. பார்வையாளர் நேரம் : ஞாயிறு காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை,

குறிப்பு : இதில் கேட்கப்பட்டிருக்கும் மாணவர் மற்றும் பெற்றோர் / பொறுப்பாளர்களுக்கான ஆவணங்களை மாணவர் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின் இல்லத்தில் தனியாக சமர்ப்பிக்க வேண்டும்.

**மேற்கூறிய விதிமுறைகளை மனப்பூர்வமாக ஏற்று முழு ஒத்துழைப்பு வழங்குவேன்..**

இப்படிக்கு

பெயர் : ............................................................ (கையொப்பம்)

உறவுமுறை : ............................................................

தொலைபேசி : ............................................................

தேதி : ............................................................